முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மௌனசித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.06.2019, சனிக்கிழமை

1. **வல்லமையூட்டி கலியுகத்தில்**
**வாழ்வாதாரம் கெடா நிலையுயர**
**இல்லாமை விரட்டி மீட்டிட**
**எல்லா மக்களின் நலம் காத்தருள**

2. அருள வந்த ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
அருளுவேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆற்றல்பட **விகாரி விடை திங்கள்**

3. **திங்களிலே மூவாறு திகதி காரி வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 18ம் நாள் 01.06.2019, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு மௌனசித்தர் யானும்**
ஓங்காரம்பட உலக நலமுற உரைப்பேன்
உயர்வான வேலை வாய்ப்பு நல்வரவு

4. வரவுடன் அமைதியான வாழ்வு
வளமான மகிழ்வான இல்லறம்
தாரபலம் புத்திர யோகபலம்
தனித்துவம் பாதுகாப்புமிக்க வாழ்வு காண

5. காணவே கலிகால மக்களே
கண்டுரைப்பேன் பிரணவக்குடில்
ஞானதேசிகனை கண்டு மக்கள்
நல்தீட்சை உபதேசம் அடைந்து

6. அடைந்து அரங்கன் காட்டும்
ஆற்றல்மிக்க சுத்தநெறி தருமநெறி
தடையற ஏற்று வருதலுற
தரணியோர் விருப்ப வாழ்வு நிலை பெறுவர்

7. நிலைத்தன்மை நீடித்த ஆயுளும்
நீங்கா அருள் பொருள் வளமும்
தழைத்து வரும் மக்கள் வாழ்வில்
தனித்துவம் சகலவளமும் காண்கும்

8. காண்கவே அழியாமை பெற்று
கலி வெல்ல வந்த தவசி
உண்மை வழி காட்டும் ஞானி
உலகமாற்றம் தரும் அரங்கன்

9. அரங்கன் அருள் பார்வை பட
ஆபத்து இடை கண்டம் விலகும்
அரங்கன் அருட்தயவு கிட்ட
ஆயுள் பலம் எளிதாக ஞானபலம்

10. பலமான பாதுகாப்பும் கிட்டும்
பரோபகாரமிக்க நல்லுலகமாக
வளம் சேர்க்க உலகை மாற்ற
வள்ளல் தன்மை மக்களடைய

11. அடைய ஆற்றல் தந்து வரும்
அரங்க மகான் நாமசெபமே
சோடையிலா தருமமே உலகை மீட்கும்
செப்பி வந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மௌனசித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மக்களின் வாழ்வாதாரம் கலியுகத்தில் கெடாத வகையிலே அவர்களுக்கு வல்லமையூட்டி நிலை உயர்ந்திட அருள் செய்து மக்களின் இல்லாமை எனும் வறுமையை போக்கி மக்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டிட உலக மக்களின் நலத்தினை காத்தருள இவ்வுலகினில் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 18ம் நாள் 01.06.2019, சனிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே மௌனசித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மௌனசித்தர்.

வேலை வாய்ப்புகள் பெறவும், வேலையில் உயர் பதவி பெறவும், தொழிலிலே நல்ல வருவாய் பெறவும், லாபம் பெருகி அமைதியான வளமான வாழ்வினை மகிழ்வாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி தாரபலத்துடனும் நல்ல யோகமுள்ள புத்திரர்களை பெற்றும், தனித்துவம்மிக்க பாதுகாப்பான வாழ்வினை வாழ கலியுக மக்களே உங்களுக்கு வழி உரைக்கின்றேன் கேளுங்கள்.

உலகினில் துன்பப்படுகின்ற மக்களை மீட்டு கடைத்தேறிட சர்வவல்லமையுடன் உண்டாக்கப்பட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஆங்கே முருகப்பெருமானின் அவதாரமாக வீற்றிருக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை கண்டு வணங்கி தீட்சை உபதேசம் அடைந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் தூய ஞான நெறிகளிலே நடந்து தருமநெறியினை பின்பற்றி தர்மங்களை தாராளமாய் செய்து வரவர, உலக மக்களெல்லாம் அவரவர் விரும்பிய வகையில் நிலையான வாழ்வினை பெறுவார்கள்.

நீடிய ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், நீங்காத அருள்பலத்தையும், பொருள் வளத்தையும் பெற்று நல்வாழ்வை தனித்துவமாய் சகலவளத்துடன் வாழ்ந்து சிறப்படைவார்கள். மரணமிலாப் பெருவாழ்வை பெற்று இந்த கலியுகத்தை வெல்லவே அவதாரமாக வந்திட்ட மகா ஞானதவசி ஆறுமுக அரங்கனே உண்மை ஞானவழியை உலகிற்கு காட்டுகின்ற மகா ஞானி ஆவார்.

உலகப் பெருமாற்றத்தை தந்தருளும் அரங்கனின் அருள் பார்வை பட்டுவிட்டால், அவர்களுக்கு ஆபத்துகள் ஏதும் வராது, விபத்துகள் ஏதும் நேராது. அவர்களுக்கு உண்டான மரண கண்டங்களும் கூட விலகிவிடும். ஆறுமுக அரங்கரின் அருள் தயவு பெற்றிட்டால் ஆயுள் பலம் பெருகும், ஞானபலமும் எளிதில் கிடைக்கும், பலம்மிக்க அருள் பாதுகாப்பும் கிடைக்கும்.

இந்த உலகினை கலியுக துன்பங்களில் இருந்து மீட்டு பரோபகாரம்மிக்க ஜீவதயவுடைய நல்லுலகமாக ஆக்கி வளம் உள்ள உலகமாக மாற்றிடவும் மக்களெல்லாம் தருமங்களை செய்து வள்ளல் தன்மை உடையவர்களாக மாற்றிடவும் மக்களுக்கு எல்லா ஆற்றலையும் தந்து காத்து வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நாமஜெபமே தடையற்ற குறையற்ற தருமமே இவ்வுலகினை மீட்கவல்ல மகா சக்தியாகும் எனக் கூறுகிறார் மகான் மௌனசித்தர்.

–சுபம்–